1972 மார்ச் 27]

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அதற்குரிய எச்சரிக்கை செய்ய பட்டு வேலே துவங்குகிருர்கள். மண்ணிலே ஒரு "லேயர்" தனியாக இருந்ததால், அது எதிர்பாராத காரணத்தால், "ஸ்லேட்" ஆகி விட்டது. இனிமேல் எச்சரிக்கையோடு வேலேகளெல்லாம் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதற்கு அதிகாரிகள் மூலமாக நட வடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த இறந்துபோன தொழிலாளி குடும்பங் களுக்குக் கொடுக்க வேண்டிய முழு காம்பன்ஸேஷன் கொடுக்கப்படு வதற்கு என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் ? அதற்கு இந்த அரசாங்கம் இதுவரை என்ன நடவடிக்கையை மேற்கொண்டிருக் கிறது ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : இதுபோன்ற விபத்துக்கள் நடந்துவிட்டால் உடனடியாக நிவாரணம் ஐநூறு ரூபாய் கொடுத் திருக்கிருேம், வாரியத்தின் சார்பாக. சட்டப்படி என்ன என்ன கொடுக்க முடியுமோ அதெல்லாம் கொடுக்கப்படுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். ஒரு இலட்ச ரூபாய் அந்தக் கண்டிராகட ருக்குக் கொடுக்கப்பட வேண்டிய பணம் கொடுக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சட்டரீதியாக எவ்வளவு கொடுக்க வேண்டுமோ அந்தப் பணத்தில் எள்ளளவும் குறையாது வழங்கப் படும்.

Representation from Voters Forum.

* 715 *Q.*—DR. H. V. HANDE : Will the Hon the Chief Minister be pleased to state—

(*a*) whether the Chief Electoral Officer of this State has received any representation from the Voters Forum, Madras, about the electoral revised lists of Graduates' and Teachers' Constituencies of Madras and other places around the 3rd week of October 1971 ; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் மு. கருணுநிதி : (அ) ஆம்.

(இ) சென்னே; வாக்காளர் மன்றம் 22—10—1971-ஆம நாளிட்ட தனது முறையீட்டில், பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகளில் வாக்காளர்களேச் சேர்த்தல் பற்றியும், வாக்காளர்களேப்

பதிவு செய்வதற்கு வாக்காளர் பதிவு அதிகாரிகளால் செய்யப்பட்ட ஏற்பாடுகள் குறித்தும் விவரங்களை அறிய விரும்பியது. அப்பொருள் குறித்த பத்திரிகைச் செய்தி அறிக்கை ஒன்றின் நகலும், வாக்காளர் மன்றத்திற்கான பதிலும் அனுப்பப்பட்டது. வாக்காளர் மன்றம் அறிய விரும்பிய தகவல்கள் அப்பத்திரிகைச் செய்தி அறிக்கையில் அடங்கியுள்ளன. பட்டதாரிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகளைப் பொறுத்த வரையில், வாக்காளர் பட்டியல்களைத் திருத்தியமைத்தது பற்றிய விவரங்களோடு, வாக்காளர் மன்றத்திற்கு இந்தியத் தேர்தல் ஆணைக்குழுவும் பதில் அனுப்பியுள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : பட்டதாரி வாக்காளர் பட்டியல் இப்பொழுது திருத்தியமைக்கப்பட்டது முழுமையாகத் திருத்தப்பட்டு வெளியிடப்பட்டிருக்கிறதா ? அதன்பேரில் ஏதாவது புகார் வந்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முழுமையாகத் திருத்தியமைக்கப்பட்டிருக்கிறது. பலமுறை அறிவிக்கப்பட்டு இந்தப் பட்டியல் இறுதியாக 29—2—1972-இல் வெளியிடப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆசிரியர் தொகுதிகளுக்கு வாக்களிப்பதற்கு ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறதா ? இல்லையென்றால், ஆரம்பப்பள்ளி ஆசிரியர்களுக்கும் வாக்குரிமை அளிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இப்பொழுது ஆசிரியர் தொகுதியில் பி. டி. ஆசிரியர்கள் அனைவரும், செகண்டரி கிரேடு பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றுபவர்களும் வாக்காளர் பட்டியலில் சேரத் தகுதி உள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆனால், ப்ரைமரி ஸ்கூலில் வேலை செய்கிறவர்களுக்கு வாக்குரிமை கிடையாது. அதற்கு நாம் முயற்சிகள் எடுத்துக்கொண்டு மத்திய அரசுக்கும் தேர்தல் கமிஷனுக்கும் எழுதியும்கூட அதில் சேர்ப்பதற்கு அவர்கள் விருப்பம் தெரிவிக்கவில்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, at present there are two sets of electoral rolls, one for panchayat elections and another for General Elections. Though both of them are defective, yet the Panchayat rolls appear to be somewhat better. So, may I know from the Hon. Chief Minister whether he will recommend to the Election Commission to have one set of correct rolls for both the elections ?

1972 மார்ச் 27]

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: அதுபற்றி எலெக்ஷன் கமிஷனர்தான் முடிவு செய்ய வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அபிப்பிராயங்கள் வேண்டுமானல் அவர்களுக்குத் தெரிவிக்கப்படலாம்.

திரு. என். மருதாசலம்: வாக்காளர் பட்டியலில் சேராமல் விட்டுப் போன பட்டதாரிகளின் விண்ணப்பம் அரசுக்கு ஏதாகிலும் வந்துள்ளதா? அப்படி வந்திருந்தால் சேர்க்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: அப்படி எதைச் சேர்ப்பதாக இருந்தாலும், வேட்பு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு 23—3—1972 தான் கடைசி நாளாகும். அதற்குள்தான் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும். தேர்தல் நாள் குறிக்கப்பட்டுவிட்ட காரணத்தால் இனி சேர்க்க இயலாது.

* 716 *Q.*—DR. H.V. HANDE: Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Secretary to Finance Department has received any letter from the Voters Forum, Madras around the 2nd week of October 1971 about the pensioners trouble in getting payment of pensions; and

(*b*) if so, the details thereof and the action taken thereon?

மாண்புமிகு டாக்டர் மு. கருணநிதி: (அ) ஆம்.

(இ) ஒய்வூதியம் பெறுபவர்களுக்கு 1971 ஆகஸ்டு திங்களில் இரண்டு புதன்கிழமைகளில் மட்டும் தொகை வழங்கப்பட்டது என்றும், மூன்ருவது புதன்கிழமை கருவூலக் கணக்கு முடிவு செய்யும் நாளானதால் ஒய்வூதியத் தொகை எதுவும் அன்று கொடுக்கப்படவில்லை என்றும் சென்னை, வாக்காளர் மன்றம் 1971 அக்டோபரில் முறையிட்டது. கருவூலக் கணக்கு முடிவு செய்யும் நாளாயிருந்தாலும் இராவிடினும் ஒரு மாதத்தில் ஒய்வூதியம் கொடுக்கப்படுவதற்கென ஒதுக்கப்பட்ட எல்லா நாட்களிலும் ஒய்வூதியம் கொடுப்பதற்கான ஆணைகளைப் பிறப்பிக்குமாறு அம்மன்றம் அரசை வேண்டிக் கொண்டது. தற்போதுள்ள ஆணைகளின்படி மாதத்தின் எல்லா புதன்கிழமைகளிலும் ஒய்வூதியம் கொடுக்கப்படுகிறது. வாக்காளர் மன்றத்தின் கருத்துரையை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. ஏதாவதொரு புதன்கிழமை துணைக் கருவூலக் கணக்கு முடிவு செய்யும்